**D–1764**

**Sub. Code**
**10711**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

First Semester

இக்கால இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பாரதிதாசன் எதனைத் தனது உயிராகக் கருதுகிறார்?

2. மு.மேத்தாவின் முதல் கவிதைத் தொகுப்பினைக் குறிப்பிடுக.

3. 'மாங்கனி' குறுங்காவியம் எவ்வாண்டு எங்கிருந்து எழுதப்பட்டது?

4. பிருந்தா சாரதியின் இயற்பெயர் யாது?

5. 'என் பண்டிகையின் நாட்குறிப்புகள்' என்னும் கவிதையின் ஆசிரியர்?

6. 'சூரியப்பிறைகள்' என்னும் கவிதை நூலின் ஆசிரியர்?

7. ஹைக்கூ - குறிப்பு வரைக.

8. 'யாருக்காக அழுதாள்' கதையின் ஆசிரியர் யார்?

9. 'சிறுகதை மன்னன், தென்னாட்டு மாப்ஸான்' எனப் புகழப்படுபவர்?

10. 'அம்பை' யின் இயற்பெயர் யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) குரங்கோடு கொண்ட குயிலின் காதலைப் பாரதி எங்ஙனம் பாடுகிறார்?

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் பாடும் இனியவைகளை விளக்கி எழுதுக.

12. (அ) மாங்கனியின் அழகினைக் கண்ணதாசன் அறிமுகம் செய்யுமாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'முதல் தேதி' கவிதை உரைக்கும் பொருளாதார உண்மைகளைச் சுட்டுக.

13. (அ) 'சூலும் சூலமும்' கவிதையை ஆராய்ந்துரைக்க.

(அல்லது)

(ஆ) கவிஞர் அமுதபாரதியின் ஹைக்கூ கவிதையின் கருத்துக்களை விவரிக்க.

14. (அ) கம்பன் படைத்த கைகேயி பற்றி வ.சுப.மாணிக்கனார் கருத்துக்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) 'இன்னொரு காந்திக்காக' நாடகத்தின் கதைச்சுருக்கத்தைச் சுட்டியுரைக்க.

15. (அ) 'பற்பசைக்குழாயும் நாவல் பழங்களும்' சிறுகதை மாந்தர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 'ஒரு வீட்டின் மூலையில் சமையலறை' சிறுகதையின் கருப்பொருளைச் சுட்டுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழின் சிறப்புகளைப் பாரதிதாசன் பாடுமாற்றை விளக்கி வரைக.

17. புதுக்கவிதையின் எளிமையை நும் பாடப்பகுதி வழி விளக்குக.

18. கம்பனின் கவி ஆளுமையை வ.சுப.மாணிக்கனார் கூற்றின் வழி நிறுவுக.

19. பிரபஞ்சன் சிறுகதையில் காணலாகும் யதார்த்தப் போக்கைப் புலப்படுத்துக.

20. உழைப்பாளர்களின் வாழ்க்கையை 'அளம்' புதினம் வெளிப்படுத்துமாற்றை விவரிக்க.

---

| D–1765 |
|---|

| Sub. Code |
|---|
| 10712 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

First Semester

இலக்கணம் – நன்னூல் எழுத்து

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பாயிரத்தின் பிற பெயர்களைக் கூறுக.

2. ஆசிரியரை வழிபடுதல் குறித்து எழுதுக.

3. தற்புகழ்ச்சி குற்றமாகாத இடங்கள் யாவை?

4. எழுத்திலக்கணத்தின் பன்னிரண்டு பகுப்புகள் யாவை?

5. எழுத்துக்கள் எவ்வாறு பிறக்கின்றன?

6. பதங்களில் வரும் எழுத்துக்களின் அதிக அளவு யாது?

7. பகுபத உறுப்புக்களைக் கூறுக.

8. தேங்காய் - புணர்ச்சி விதி கூறுக.

9. நன்னூல் தொகுத்துக் கூறும் சாரியைகள் யாவை?

10. சுட்டுப் பெயரில் வரும் ஆய்த எழுத்து எப்போது கெடும்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மாணவர் பாடம் கேட்கும் முறையை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பத்து வகை அழகு குறித்து எழுதுக.

12. (அ) 'ஒன்றொழி முற்றூற்று எழுபான் என்ப'- விளக்குக.

(அல்லது)

(ஆ) நூல் பற்றிய கோட்பாடுகள் குறித்து எழுதுக.

13. (அ) மாத்திரை குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) இயல்பு, விகாரப் புணர்ச்சி குறித்து விவரிக்க.

14. (அ) நிலைமொழி, வருமொழியைச் சான்றுகளுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) திசைப்பெயர்ப் புணர்ச்சியை விளக்குக.

15. (அ) ய, ர, ழ ஈற்றுப் புணர்ச்சி குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) சாரியைப் பற்றிய புறனடை நூற்பாவின் கருத்தை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மூவகை நூல்கள் பற்றி விரித்து எழுதுக.

17. உயிர், மெய் எழுத்துக்களின் பிறப்பை விளக்குக.

18. எண்ணுப் பெயரின் பொதுப் புணர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

19. லகர, ளகர ஈற்று நிலைமொழிகளின் புணர்ச்சி விதிகளை விளக்கி வரைக.

20. நண்பனுக்குக் கல்லூரியில் வேலை கிடைத்தது பற்றி மகிழ்ச்சி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

———————

| D–1766 |
|---|

| Sub. Code |
|---|
| 10713 |

DISTANCE EDUCATION

B.Lit (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

First Semester

தமிழக வரலாறு

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘தென்புலம்’ என அழைக்கப்படும் நாடு யாது?

2. ‘குலபதி’ என்னும் பட்டம் குறித்து எழுதுக.

3. களப்பிரர் ஆட்சியில் எச்சமயங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன?

4. ‘வாதாபிக் கொண்டான்’ எனப் பாராட்டப்படும் மன்னன்?

5. பல்லவர் காலத்தில் மூலிகைகளுக்கு இட்ட வரிகள் எவை?

6. ‘தொண்டை நாடு பரவின சோழன்’ என்னும் சிறப்புப் பெயருடைய மன்னன்?

7. சோழர் காலத்தில் கண்பார்வையற்றோருக்கு வழிக் காட்டுவோரின் பெயர் யாது?

8. ‘மதுரா விசயம்’ என்ற நூலை எழுதியவர்?

9. ‘உலகப் பயணிகளின் இளவரசர்’ எனப் போற்றப்படுபவர் யார்?

10. ‘தண்டி யாத்திரை’-குறிப்பு வரைக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சங்க கால மூவேந்தர்களின் ஆட்சித்திறத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) 'மூதின் மகளிர்' குறித்த கருத்துக்களை விளக்கி வரைக.

12. (அ) களப்பிரர் காலச் சமூக நிலைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) முற்காலப் பல்லவர்களின் வரலாற்றைச் சுருக்கி எழுதுக.

13. (அ) பாகூர் வடமொழிக் கல்லூரி பற்றிய வரலாற்றைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) சுங்கம் தவிர்த்த சோழன் வரலாற்றை விரித்துரைக்க.

14. (அ) பாண்டியர்களின் வீழ்ச்சிக்கான காரணங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திருமலை நாயக்கரின் சமயப்பொறையைச் சான்றுகளுடன் விவரிக்க.

15. (அ) தமிழக வரலாற்றில் இராணி மங்கம்மாள் பெறுமிடத்தைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) சுயமரியாதை இயக்கத்தால் தமிழகத்தில் விளைந்த நன்மைகளை விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழகத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளைப் பற்றி விளக்குக.

17. பல்லவர் காலத்தில் கலைகள் பெற்றிருந்த வளர்ச்சிகளைக் கட்டுரைக்க.

18. பாண்டியர் சோழர் தொடர்பு குறித்த வரலாற்றைப் புலப்படுத்துக.

19. சுதந்திரப் போரில் கட்டபொம்மனின் பங்கெடுப்பை விவரிக்க.

20. ஆங்கிலேயர் ஆட்சியால் தமிழகம் பெற்ற நன்மைகளைத் தொகுத்துரைக்க.

| D–1767 |
|---|

| Sub. Code |
|---|
| 10714 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

First Semester

சிற்றிலக்கியம்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. கல்லாடம் எச்சமய நூல்?
2. நந்திக் கலம்பகம் யார் மீது பாடப்பட்டுள்ளது?
3. கலம்பகத்தில் எத்தனை உறுப்புகள் காணப்படும்?
4. விஷ்ணுசித்தர் என்று அழைக்கப்பெற்றவர் யார்?
5. வையம் ஏழும் கண்டனன் யார்? எவ்வாறு?
6. கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவன் யார்?
7. கலிங்கத்துப் பரணியும் பொன் தேங்காயும் வரையறுக்க.
8. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் எந்த மன்னன் காலத்தில் அரங்கேற்றப்பட்டது?
9. தமிழில் தோன்றிய முதல் பிள்ளைத்தமிழ் நூல் யாது?
10. பரணியின் இலக்கணம் குறித்து எழுதுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கல்லாடம் நூல் அமைப்பும் சிறப்பும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஊசல் என்ற உறுப்பில் பேசப்படும் நந்திவர்மன் போர் திறத்தை எழுதுக.

12. (அ) பெரியாழ்வார் பக்தித் திறத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) திருப்பல்லாண்டு கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

13. (அ) சயங்கொண்டாரும் சயங்கொண்டானும் - விளக்குக.

(அல்லது)

(ஆ) காளியின் தோற்றப் பொலிவை விளக்குக.

14. (அ) பசிக்கொடுமை தாங்காமல் பேய்கள் தேவியிடம் முறையிடும் நிகழ்வினை எழுதுக.

(அல்லது)

(ஆ) குலோத்துங்கன் அவதரித்த சிறப்பினை விவரிக்க.

15. (அ) தொடுக்கும் கடவுட் பழம்பாடல் எனும் பாடல்வழி மீனாட்சியம்மையின் மாண்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) குலோத்துங்கன் சோழ உலா பாட்டுரைத் தலைவனின் சிறப்புகளை விவரிக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. பெரியாழ்வாரின் திருமொழி செய்திகளைப் புலப்படுத்துக.

17. நந்திக் கலம்பகத்தால் அறியலாகும் வீரம், புகழ், கொடை குறித்து கட்டுரைக்க.

18. கலிங்கத்துப்பரணியில் பேய்களின் செயல்பாடு பற்றி விவரிக்க.

19. கடைத் திறப்பு பகுதியில் செயங்கொண்டாரின் கவித்திறனைக் கட்டுரைக்க.

20. சிற்றிலக்கியங்களின் தோற்றம் வளர்ச்சி குறித்து விவரிக்க.

———————

| D–1768 |
|---|

| Sub. Code |
|---|
| 10721 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Second Semester

அற இலக்கியம்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. திருக்குறள் முதன் முதலில் எந்த ஆண்டு யாரால் அச்சேற்றம் செய்யப்பட்டது?

2. ஒழுக்குமுடைய கீழ்மக்கள் எவ்வாறு கருதப்படுவர் எனத் திருக்குறள் உரைக்கிறது?

3. அற்றம் மறைப்பது எது?

4. யாரை மரம்போல்வர் என வள்ளுவர் குறிக்கப்படுகிறார்?

5. சான்றாண்மையின் சிறந்த பண்பு எனக் குறிக்கப்படுவது.

6. நாலடியாருக்கு அரும்பத உரை எழுதியவர் யார்?

7. பழமொழியின் வேறு பெயர்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

8. யாருக்கு ஆற்றுணா வேண்டுவது இல்லை?

9. குமரகுருபரர் இயற்றிய கலம்பகம் எது?

10. பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம் - விளக்கம் தருக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திருக்குறள் உரையாசிரியர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மானம் குறித்த திருவள்ளுவரின் கருத்துக்களை விளக்குக.

12. (அ) சான்றாளனின் தகுதிகளாகத் திருக்குறள் குறிப்பன யாவை?

(அல்லது)

(ஆ) குடிமை குறித்த வள்ளுவரின் கருத்துக்களைச் சுருக்கி வரைக.

13. (அ) பிறன் மனை நயவாமை குறித்து நாலடியார் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) பழமொழியின் பண்புகளை விளக்கியுரைக்க.

14. (அ) குமரகுருபரரின் இலக்கியப்பணி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திருமூலரின் யாக்கை நிலையாமை குறித்த செய்திகளைச் சுருக்கித் தருக.

15. (அ) திருமந்திரத்தின் சிறப்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ்ப் புலவரின் புகழ் பற்றிய குமரகுருபரரின் கருத்துக்களை எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல் என்பதை நிறுவுக.

17. திருவள்ளுவர் பண்புடைமை அதிகாரக் கருத்துக்களை ஆராய்க.

18. அறிவுடைமை குறித்த முன்றுரையறையனாரின் கருத்துக்களை விரித்துரைக்க.

19. இளமை, யாக்கை நிலையாமை குறித்த திருமூலரின் எண்ணங்களைப் புலப்படுத்துக.

20. கற்றறிந்தாரின் இயல்புகளாகக் குமரகுருபரர் குறிப்பனவற்றை விளக்கியுரைக்க.

———————

| D–1769 |
|---|

| Sub. Code |
|---|
| 10722 |

DISTANCE EDUCATION

B.Lit (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Second Semester

இலக்கணம் : நன்னூல் சொல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘வேங்கை’ என்னும் ஒரு மொழியைத் தொடர் மொழியாக்குக?

2. பெண்மை விட்டு அவாவுவ நன்னூலாரால் எவ்வாறு குறிக்கப்படுகின்றது?

3. தகுதி வழக்குகள் யாவை?

4. உடனிகழ்ச்சிப் பொருளின் இருவகைகள் யாவை?

5. ஆண்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் யாவை?

6. யார் என்னும் வினைக்குறிப்பு எவ்வகைப் பாடல்களுக்கு உரியது?

7. இயற்கைப் பொருளை எவ்வாறு குறித்தல் வேண்டும்?

8. ‘தில்’ என்னும் இடைச்சொல் தரும் பொருள்கள் யாவை?

9. உரிச்சொற்களின் வகைகள் யாவை?

10. உயிர்ப்பொருள்களின் பண்புகள் எத்தனை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வழக்குகள் குறித்த நன்னூலார் கருத்தைச் சுருக்கித் தருக.

(அல்லது)

(ஆ) அளவை ஆகுபெயர்கள் குறித்து விளக்குக?

12. (அ) மூன்றாம் வேற்றுமை உருபுகள் பயின்று வரும் பொருள் குறித்து எழுதுக?

(அல்லது)

(ஆ) வினைச்சொல் வகைகளை விவரிக்க.

13. (அ) வியங்கோள் வினைமுற்றுக்கான ஈறுகளைச் சான்று தந்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) பெயரெச்சங்கள் குறித்து எழுதுக.

14. (அ) திணை பால் எண் இடப்பொதுமை நீக்குதல் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வேற்றுமைத் தொகைகளுக்குச் சான்று தந்து விளக்குக.

15. (அ) உயிர்களின் வகைகள் குறித்த நன்னூலார் கருத்தைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) நிறுத்தக் குறிகளின் வகைகளை அறிமுகம் செய்க?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. ஆகுபெயர்களின் வகைகளை ஆராய்க.

17. வினைமுற்று வகைகளை விளக்கியுரைக்க.

18. எழுவாய், விளி வேற்றுமைகளின் பண்புகளை விவரித்தெழுதுக.

19. பொதுவியல் என்னும் பெயர்ப்பொருத்தத்தை நன்னூல் வழிப் புலப்படுத்துக.

20. உரிச்சொற்களின் வகைகளும் பண்பும் குறித்துச் சுருக்கி வரைக.

———————

| D–1770 |
|---|

| Sub. Code |
|---|
| 10723 |

DISTANCE EDUCATION

B.Lit (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023

Second Semester

தமிழ்மொழி வரலாறு

(CBCS 2018-19 Academic Year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. வழக்கிலுள்ள திராவிட மொழிகள் நான்கினைக் குறிப்பிடுக.

2. சதுரகராதி – சிறுகுறிப்பு வரைக.

3. சமணர்களின் குகை வாழிடங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

4. தொல்காப்பியர் குறிப்பிடும் சார்பெழுத்துக்கள் எத்தனை?

5. சோழர் காலத்தில் தமிழ் மொழியில் தோன்றிய விகுதிகள் எவை?

6. மொழிபெயர்ப்பில் பங்குபெறும் மொழிகளை எங்ஙனம் அழைப்பர்?

7. ‘புனல் நாடு’ என்பது தற்காலத்தில் எங்ஙனம் அழைக்கப்படுகிறது?

8. கரிசல் வட்டார வழக்ககராதியை உருவாக்கியவர்?

9. எழுத்து முறைகளின் மூன்று வகைகளைக் குறிப்பிடுக.

10. தமிழில் துணையெழுத்துகளைச் சீர்த்திருத்திய பெரியவர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) உரையாசிரியர்களின் மொழிச் சேவையை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) தமிழகக் கல்வெட்டுக்கள் உரைக்கும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

12. (அ) தொல்காப்பியம் பேசும் மூன்று சிறப்பொலிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ்ப் பிராமி எழுத்து முறைகளை விளக்கி வரைக.

13. (அ) சமஸ்கிருதச் சொற்களைத் தமிழாக்கும் வகையை விளக்குக.

(அல்லது)

(ஆ) தற்காலப் பேச்சு வழக்கில் ஏற்படும் ஒலி மாற்றங்களைச் சுட்டியுரைக்க.

14. (அ) அறிவியல் தமிழின் வளர்ச்சி வரலாற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கிளைமொழிகள் என்றால் என்ன? சான்றுகளுடன் விளக்குக.

15. (அ) தமிழில் வட்டெழுத்துத் தோன்றிய வரலாற்றைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) தமிழின் வரிவடிவ எழுத்து முறையைப் பற்றி விரித்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மொழியின் வளர்ச்சியை அறிய உதவும் சான்றாதாரங்களை எடுத்துரைக்க.

17. தமிழ் அகராதியியலில் வீரமாமுனிவர் பெறுமிடத்தைச் சான்றுகளுடன் விவரிக்க.

18. தொல்காப்பியர் வழி 'தனி மெய்யெழுத்து' வடிவத்தினைச் சுட்டியுரைக்க.

19. 'ஊடகத்தமிழ்' பற்றி நும் பாடப் பகுதி கொண்டு விவரிக்க.

20. தந்தை பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்த்திருத்தம் குறித்துக் கட்டுரைக்க.

———————

| D–1771 |
|---|

| Sub. Code |
|---|
| 10724 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Second Semester

திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல்

(CBCS 2018 – 2019 Academic year onwards)

Time : Three hours                Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ஆசிய மொழியில் உள்ள நாவளை ஒலிகள் திராவிட மொழிகளின் தாக்கத்தால் வந்தவை எனக் கூறியவர்?

2. கால்டுவெல் ‘திருந்தாத மொழிகள்’ என எவற்றைக் குறிக்கின்றார்?

3. ‘குயி’ எப்பகுதியில் பேசப்படும் மொழி?

4. உயிரொலிகள் எவற்றால் வகைப்படுத்தப்படும்?

5. ‘பிராகுயி’ மொழியில் நீங்கல்பொருள் வேற்றுமை தரும் உருபு எது?

6. இடப்பொருள் வேற்றுமை உணர்த்தும் உருபு யாது?

7. பெயருக்குப் பின் பின்னடைகள் பெற்று வரும் மொழிகள் எவை?

8. திராவிட மொழிகளில் செயப்பாட்டு வினை என்ற அமைப்பே கிடையாது எனக் கூறியவர் யார்?

9. தென் திராவிட மொழிகளில் ஒன்றன் பால் விகுதியாக அமைவது எது?

10. ஏவல் பொருள் தரும் வினைகளின் இருவகைப் பகுப்புகள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நீலகிரி மலைப்பகுதியில் காணப்படும் மொழிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திராவிட மொழியின் தனித்தன்மைகள் சிலவற்றை விளக்குக.

12. (அ) ஒலித்துணை உயிர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வல்லொலிகளுக்குச் சான்று தந்து விளக்குக.

13. (அ) திராவிட மொழிகளில் மெய்யொலிகள் ஓரினமாதல் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிகளின் பெயர்ச்சொற்கள் குறித்துச் சுருக்கி வரைக.

14. (அ) செயப்பாட்டு வினை உணர்த்தப்படும் முறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிகளில் இறந்தகால இடைநிலைகள் குறித்து எழுதுக.

15\. (அ) வினையெச்சங்களின் வகைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) வினையடியாகப் பிறக்கும் பெயர்களுக்குச் சான்று தந்து விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16\. திராவிட மொழிக்குடும்பங்கள் குறித்த அறிஞர்களின் கருத்துக்களை விரித்துரைக்க.

17\. திராவிட மொழிகளில் திணை, பால் எண், இட மாற்றங்கள்-என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

18\. திராவிட மொழிகளில் ஒலி பிறப்பு முறைகள் குறித்து ஆராய்க.

19\. வினைச்சொற்கள் காலம் காட்டும் தன்மைகள் குறித்து விவரித்தெழுதுக.

20\. திராவிட மொழிகளின் சொற்றொடர் அமைப்பு முறைகளை ஆராய்க.

———————

| D–1772 |
|---|

| Sub. Code |
|---|
| 10731 |

DISTANCE EDUCATION

B.Lit. DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Third Semester

Tamil

சமய இலக்கியம்

(CBCS 2018-19 Academic Year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘தமிழ் மூவாயிரம்’ என்றழைக்கப்படும் சமய இலக்கியம்?

2. ஆண்டாளுக்குப் பெரியாழ்வார் இட்டப் பெயரைக் கூறுக.

3. யார் பாடிய பாடல்கள் ஏழாம் திருமுறையாக அமைந்துள்ளது?

4. ‘அறிவுசேரர்’ என்னும் பெயருக்கு விளக்கம் தருக.

5. ‘எலும்பு பூவாக மாறிய சிவத்தலம்’ யாது?

6. மாணிக்கவாசகரின் படைப்புகளைக் குறிப்பிடுக.

7. ‘சோணசைல மாலை’ என்னும் பக்திப் பனுவல்களைப் பாடியவர்?

8. அருட்பிரகாச வள்ளலாரின் இயற்பெயர் யாது?

9. குணங்குடி மஸ்தான் சாகிபு பாடிய பாடல்களின் எண்ணிக்கை?

10. எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை பிறப்பால் எம்மதத்தினர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழ் மறைகளின் மேன்மைகளைத் திருமூலம் பாடுமாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆண்டாள் திருமாளிடம் பறை வேண்டும் தன்மையை எடுத்துரைக்க.

12. (அ) நாவுக்கரசர் தன் நெஞ்சிற்கு அறிவுறுத்துமாற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) சமண சமயத்தைத் திருஞானசம்பந்தர் எங்ஙனம் கண்டிக்கின்றார்?

13. (அ) பன்றிக்கு அருள்புரிந்த இறைவனை மாணிக்கவாசகர் எங்ஙனம் பாடுகிறார்?

(அல்லது)

(ஆ) திருப்பூவணத்துப் பெருமையைச் சுந்தரர் பாடல் வழிப் புலப்படுத்துக.

14. (அ) பற்றறுத்தல் குறித்த குதம்பைச் சித்தரின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வள்ளலார் பழவினைகள் தீர்வதற்குக் கூறும் வழிகளைச் சுட்டுக.

15. (அ) இணையில்லா இறைவனைக் குணங்குடியார் எங்ஙனம் புகழ்ந்துரைக்கிறார்?

(அல்லது)

(ஆ) இறைவனிடம் எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை வேண்டுவனவற்றை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பாவை நோன்பு குறித்து ஆண்டாள் பாடுமாற்றை விளக்கி வரைக.

17. உள்ளக்கோயிலில் இறைவன் அருளியமாற்றை அப்பர் பாடல்கள் வழி விளக்குக.

18. இசைக்கு மயங்கும் இறைவனைக் கருவூர்தேவர் கூறுமாற்றை விவரிக்க.

19. வள்ளலாரின் தெய்வமணிமாலைக் கூறும் செய்திகளை விளக்கி வரைக.

20. குணங்குடி மஸ்தான் உரைக்கும் 'நிலையாமை' கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

———————

| D–1773 |
|---|

| Sub. Code |
|---|
| 10732 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Third Semester

இலக்கணம் அகப்பொருளும் யாப்பும்

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. அகப்பொருள் விளக்கம் ஆக்கியோன் பெயரைக் தருக.

2. கைக்கிளையாகக் கருதப்படும் ஒழுக்கங்களைக் குறிப்பிடுக.

3. அகப்பொருள் ஆசிரியர் கூறும் சிறுபொழுதுகள் எவை?

4. அன்பின் ஐந்திணைகளுக்குரிய உரிப்பொருட்களைக் கூறுக.

5. இயற்கைப் புணர்ச்சியின் இருநிலைகளைக் குறிப்பிடுக.

6. அகப்பொருள் பேசும் இல்வாழ்க்கையின் கூறுகளைச் சுட்டுக.

7. இடந்தலைப்பாடு என்றால் என்ன?

8. மாத்திரை - சிறு குறிப்பு வரைக.

9. முதற்தொடை வகைகளை எழுதுக.

10. கலிப்பா உறுப்புகளைச் சுட்டுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நம்பியகப்பொருள் வரையறுக்கும் அகத்திணைகளைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) ஐந்திணைக்களுக்குரிய பொழுதுகளைச் சான்றுகளுடன் விளக்குக.

12. (அ) முல்லைத்திணைக்குரிய கருப்பொருள்களைச் சுட்டிரைக்க.

(அல்லது)

(ஆ) தலைமக்கள் சந்திக்கும் குறியிடங்கள் குறித்த கருத்துக்களை எழுதுக.

13. (அ) வரைவிடை வைத்த பிரிவைச் சான்றுடன் காட்டி விவரிக்க.

(அல்லது)

(ஆ) கற்பிற்குரிய கிளவித் தொகைகளை விரித்துரைக்க.

14. (அ) காரிகை உரைக்கும் சீர் வகைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அந்தாதி, இரட்டைத்தொடை ஆகியவற்றை விளக்கி வரைக.

15. (அ) அடியின் வகைகளைக் காரிகை வரையறுக்குமாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) பாக்களுக்குரிய ஓசைகளை வகைகளுடன் கட்டுரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நில அடிப்படையில் ஐந்திணைகளுக்குரிய உரிப்பொருட்களை ஆராய்க.

17. பாங்கிமதி உடன்பாட்டின் மூன்று நிலைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

18. அறத்தொடு நிற்கும் முறைகளை அகப்பொருள் வழி விரித்துரைக்க.

19. 'தளை' கொள்ளும் முறைகளையும் வகைகளையும் எடுத்துரைக்க.

20. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தைச் சான்றுகள் தந்து விவரிக்க.

———————

| D–1774 |
|---|

| Sub. Code |
|---|
| 10733 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023

Third Semester

தமிழிலக்கிய வரலாறு

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. யார் தமிழ்க் கற்பதற்காகக் கபிலர் குறிஞ்சிப்பாட்டை இயற்றினார்?

2. நாலடியார் – சிறு குறிப்பு வரைக.

3. அணிகலங்களின் பெயர்களில் அமைந்த காப்பியங்களைக் கூறுக.

4. ஐந்திலக்கணம் பேசும் நூல்கள் இரண்டினை எழுதுக.

5. தேவாரம் பாடிய மூவர் முதலிகள்?

6. உலா – வரையறுக்க.

7. தமிழ் நாடகத் தலைமையாசிரியர் யார்?

8. வீரமாமுனிவர் எழுதிய சிறுகதையில் பெயர் யாது?

9. ‘தென்னாட்டு பெர்னாட்ஷா’ எனப் போற்றப்படுபவர்?

10. தமிழ்ப் புதுக்கவிதை வளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் அமைந்தவர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) முச்சங்க வரலாற்றை நும் பாடப் பகுதி வழித் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அகநானூற்றின் நூல் பகுப்பும் சிறப்பும் குறித்து விளக்குக.

12. (அ) அற இலக்கியங்களில் நாலடியார் பெறுமிடத்தைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) கம்பராமாயணத்தின் தனித்தன்மைகளை எடுத்துரைக்க.

13. (அ) நாலாயிர திவ்யபிரபந்தம் குறித்த கருத்துக்களை தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உரையாசிரியர்களின் திறனாய்வு நெறிகளை விளக்கி எழுதுக.

14. (அ) சிற்றிலக்கியத்தில் 'முக்கூடற்பள்ளு' பெறுமிடத்தைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) கிறித்துவர்களின் தமிழ்த்தொண்டினைப் பாராட்டியுரைக்க.

15. (அ) பாரதிதாசனின் பகுத்தறிவுச் சிந்தனைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற இலக்கிய வரலாற்றைச் சுருக்கி எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பத்துப்பாட்டு இலக்கியங்களின் வரலாற்றுக் கருத்துக்களை எழுதுக.

17. உலகப் பொதுமறை திருக்குறள் என்பார் கருத்தை நிறுவுக.

18. காரைக்கால் அம்மையாரின் பக்தித்திறத்தினை விரித்துரைக்க.

19. தமிழ்ப் புதின வரலாற்றைச் சான்றுகளுடன் விவரிக்க.

20. பாரதியார் பாடல்களில் காணலாகும் தேசப் பற்றினைக் கட்டுரைக்க.

———————

| D–1775 |
|---|

| Sub. Code |
|---|
| 10734 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023

Third Semester

காப்பிய இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. 'அடிகள் நீரே அருளுக' என்று இளங்கோவடிகளிடம் கூறிய புலவர் யார்?

2. சிலப்பதிகாரம் – பெயர்க்காரணம் கூறுக.

3. இளங்கோ துறவிற்கான காரணம் யாது?

4. சீவக சிந்தாமணி எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது?

5. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் யார்?

6. சிந்தாமணியில் பின்னோக்கு உத்தி பற்றிக் குறிப்பிடுக.

7. கம்பர் இயற்றிய நூல்களில் இரண்டினைக் சுட்டுக.

8. சேக்கிழார் மேற்கொண்ட அரசுப் பணி எது?

9. பூசலாரின் சிறப்பு யாது?

10. இராமன் குகனிடம் நட்பு காட்டிய விதம் பற்றி கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்குக் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சிலம்பு உணர்த்தும் சமூக நம்பிக்கைகளுள் ஒன்றைச் சான்றுடன் எழுதுக.

(அல்லது)

(ஆ) சிலம்பில் இடம் பெறும் முரண் சுவைக்கு ஒரு சான்றுடன் விளக்குக.

12. (அ) சிலப்பதிகாரத்தில் புறநிலைக் கட்டமைப்புக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரத்தில் இலக்கிய நயம் – விளக்கி வரைக.

13. (அ) சிலப்பதிகாரக் காலச் சமூகச் சூழல் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சீவகன் தாபதர்களோடு அளவளாவிய நிகழ்ச்சியை விவரிக்க.

14. (அ) சீவகன் பிரிவும் கேமசரியின் துயரும் – விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) குகன் தன் படையினர்க்கு இட்ட கட்டளை குறித்து எழுதுக.

15. (அ) கோமகள் கோசலை துயர் – குறிப்புரை தருக.

(அல்லது)

(ஆ) உமறுப்புலவர் வாழ்வும் பணியும் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சிலப்பதிகாரம் முத்தமிழ் காப்பியம் என்பதைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

17. சீவகசிந்தாமணி பேசும் அறக்கருத்துகள் குறித்து எடுத்துரைக்க.

18. கம்பரின் காப்பியத் திறத்தைப் பல்வேறு சான்றுகளுடன் கட்டுரைக்க.

19. தேம்பாவணி பாலைபுகுபடலம் பகுதியினை விவரிக்க.

20. உமறுப் புலவரின் வருணனையின் சிறப்பைப் புலப்படுத்துக.

———————

| D–1776 |
|---|

| Sub. Code |
|---|
| 10741 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Fourth Semester

கவிதை இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. விதுரன் பாண்டவர்க்குக் குறிப்பால் உணர்த்தியது யாது?

2. பாரதிதாசனின் கவிதை நாடகங்கள் இரண்டனைக் குறிப்பிடுக.

3. மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை பெற்ற பட்டம் யாது?

4. பெண்ணின் நாணம் என்பது எதன் சிக்கனம்?

5. சீலம் பேணும் உள்ளத்தைத் தேடி வருபவர் யார்?

6. கண்ணதாசன் எந்த நாவலுக்குச் சாகித்ய அகாதமி விருது பெற்றார்?

7. 'காடுகளின் காவலர்கள்' எனச் சிற்பி பாலசுப்ரமணியன் யாரைக் குறிப்பிடுகிறார்?

8. அப்துல் ரகுமான் தந்த புதிய கவிதை வடிவங்கள் யாவை?

9. 'ஒரு சிறு இசை' நூலின் ஆசிரியர் யார்?

10. கழனியூரனின் இயற்பெயர் யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) "இது பொறுப்பதில்லை தம்பி" என வீமன் கூறக் காரணம் யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ்த்தாய் வாழ்த்துக் குறித்து எழுதுக.

12. (அ) தமிழ்த் தாய்வணக்கம் - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) சிக்கனம் குறித்த சுரதாவின் கருத்துக்களைச் சுருக்கி வரைக.

13. (அ) எழுதிச் செல்லும் விதியின் கை - திறம் காண்க.

(அல்லது)

(ஆ) சிந்தர் குறித்து நீவிர் அறிவன யாவை?

14. (அ) பிச்சமூர்த்தியின் படைப்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 'வெற்றிவிழா' கவிதைகளின் பாடுபொருள் குறித்து விளக்குக.

15. (அ) கல்யாண்ஜியின் எழுத்துலகம் பற்றிக் குறிப்புத் தருக.

(அல்லது)

(ஆ) தமிழன்பனின் ஹைகூ கவிதைகள் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. பாஞ்சாலி சபதம் பாரதியின் கனவுப் படைப்பு - விவரிக்க.

17. மரபுக் கவிதையின் போக்குகளை நும் பாடப்பகுதி வழிப் புலப்படுத்துக.

18. தைப்பாவையில் கண்ணதாசனின் படைப்பாக்கத் திறன் என்ற பொருளில் கட்டுரை வரைக.

19. புதுக்கவிதையில் வானம்பாடிக் கவிஞர்கள் குறித்து விளக்கியுரைக்க.

20. தமிழில் குறுங்கவிதைகள் வளர்ச்சியும் வரலாறும் குறித்து விவரிக்க.

———————

| D–1777 |
|---|

| Sub. Code |
|---|
| 10742 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Fourth Semester

இலக்கணம் புறப்பொருளும் அணியிலக்கணமும்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. புறப்பொருள் வெண்பாமாலை - குறிப்பு வரைக.

2. உண்டாட்டு என்றால் என்ன?

3. பாசறையின் வகைகளைக் கூறுக.

4. மகட்பாற் காஞ்சியை விளக்குக.

5. மன்னனின் உறக்கத்தைப் பேசும் துறை யாது?

6. 'அணிகளின் தாய்' எனக் கூறப்படும் அணி?

7. சிலேடை எத்தனை வகைப்படும்?

8. தண்டி பேசும் உவம உருபுகளின் எண்ணிக்கை?

9. ஒரு பாடலில் பல அணிகள் கலந்து வருவதை எங்ஙனம் கூறுவர்?

10. 'பாவிக அணி' எச்செய்யுளில் அமைந்து வரும்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) விரிச்சிக் கேட்டலின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) நெடுமொழிக் கூறலைச் சான்றுகளுடன் விளக்குக.

12. (அ) செருவிடை வீழ்தல் குறித்து விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) ஊழிஞைப் போர் இயல்புகளை விவரிக்க.

13. (அ) காஞ்சியின் பொது இயல்புகளை சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) வாயுறை வாழ்த்தின் தனித்துவத்தை எடுத்துரைக்க.

14. (அ) முற்றுருவகம் என்பதைச் சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) தற்குறிப்பேற்றம் குறித்து கருத்துக்களை எழுதுக.

15. (அ) வஞ்சப் புகழ்ச்சி அணியைச் சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) சுவையணி பேசும் எண்வகை மெய்ப்பாடுகளைக் கூறுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஆநிரை மீட்டலுக்கான போரை நும் பாடப் பகுதியால் கட்டுரைக்க.

17. நொச்சித்திணையின் இயல்புகளைச் சான்று காட்டி விளக்குக.

18. வாகைப் படலச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. உவமை அணியின் இலக்கணத்தை வகைகளுடன் விளக்குக.

20. பின்வருநிலை அணியினைச் சான்றுகளுடன் விவரிக்க.

---

| D–1778 |
|---|

| Sub. Code |
|---|
| 10743 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Fourth Semester

நாட்டுப்புறவியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours        Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. Folklore - என்னும் சொல்லை நாட்டுப்புறவியல் என மொழிபெயர்த்தவர்?

2. பழமொழியைத் தொல்காப்பியர் எங்ஙனம் சுட்டியுள்ளார்?

3. 'கிரகணம்' சார்ந்த கதைகளைத் தொகுத்தவர் யார்?

4. தாலாட்டு - சிறுகுறிப்பு வரைக.

5. நல்லதங்காள் பிறந்த ஊராகக் கருதப்படுவது?

6. கேரளக் கும்மியின் பெயரைக் குறிப்பிடுக.

7. கரகாட்டத்தின் வகைகளைச் சுட்டுக.

8. கொந்தளம் என்றால் என்ன?

9. கனவு தொடர்பான நம்பிக்கைகள் இரண்டினைக் கூறுக.

10. சிலம்பாட்டத்தின் வகைகளை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) நாட்டுப்புற இலக்கிய வகைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியம் பேசும் நாட்டுப்புறக் கூறுகளை விவரிக்க.

12. (அ) தமிழக நாட்டுப்புறவியல் வரலாற்றைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) ஒப்பாரிப் பாடல்களின் இயல்புகளை எடுத்துரைக்க.

13. (அ) நாட்டுப்புறக்கதைகளின் தன்மைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) நிகழ்த்துக் கலைகளில் 'சபை வணக்கம்' இடம்பெறுமாற்றை விவரிக்க.

14. (அ) தமிழர் மரபில் வளைக்காப்புச் சடங்கின் முக்கியத்துவத்தைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) மதுவெடுப்பு விழாக் குறித்து விளக்கி வரைக.

15. (அ) பூப்பறிக்க வருகிறோம் விளையாட்டின் முறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறவியலும் சமூகவியலும் குறித்து ஒப்பிடுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. விளையாட்டுப் பாடல்களைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

17. முத்துப்பட்டன் வரலாற்றைக் கதைப்பாடல் வழி விவரிக்க.

18. ஒயிலாட்டம் ஆடப்படும் முறைகளை விளக்குக.

19. 'சடுகுடு' விளையாட்டின் வளர்ச்சி நிலைகளைப் புலப்படுத்துக.

20. அமைப்பியல் அடிப்படையில் பழமொழிகளை வகைப்படுத்துக.

———————

| D–1779 |
|---|

| Sub. Code |
|---|
| 10744 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Fourth Semester

இதழியல்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தகவல் தொடர்பு சாதனங்களைக் கூறுக.

2. தமிழ் மாகசீன் – சிறு குறிப்பு வரைக.

3. e-mail எனப்படும் மின்னஞ்சலைக் கண்டுபிடித்தவர் ?

4. குற்றச் செய்தி மூலங்களைக் குறிப்பிடுக.

5. சிறுவர் இதழ்கள் இரண்டினைச் சுட்டுக.

6. தமிழ் இதழ்களில் கருத்துப் படத்தை அறிமுகம் செய்தவர்?

7. வாய்ப்பூட்டுச் சட்டம் என்றால் என்ன?

8. இந்தியாவின் முதல் முழுநிள மௌனப்படம் எது?

9. BBC – விரிவாக்கம் செய்க.

10. இந்தியாவில் அதிகம் கேட்கப்படும் வானொலி ஒலிப்பரப்பு ?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'அரசின் நான்காம் கூறு இதழியல்' என்னும் கருத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) இதழ்களின் வகைகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

12. (அ) செய்தி அறையின் முக்கியத்துவத்தைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) செய்தித்தாள் பக்க அமைப்பிற்குத்துணை செய்பனவற்றை எழுதுக.

13. (அ) செய்தித்தாள் தலைப்பிற்கான காரணிகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) செய்தி நிறுவனங்களின் பணிகளை எடுத்துரைக்க.

14. (அ) பதிப்புரிமைச் சட்டம் பற்றி விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) இந்தியாவில் பத்திரிக்கை சுதந்திரம் பெறுமாற்றை விவரிக்க.

15. (அ) வெளிநாட்டுச் செய்தியாளர்களின் பணிகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) இதழ் வளர்ச்சிக்கு விளம்பரத்தின் அவசியத்தை உணர்த்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. செய்தியின் வகைகளைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

17. செய்தியாளர்களுக்குரிய தகுதிகளை விளக்கி எழுதுக.

18. பத்திரிக்கை மன்றத்தின் பணிகளை விளக்குக.

19. இதழ்களில் தலையங்கம் பெறுமிடத்தைச் சுட்டியுரைக்க.

20. இதழ்கள் தொடங்குவதற்கான விதிமுறைகளை எடுத்துரைக்க.

———————

| D–1780 |
|---|

| Sub. Code |
|---|
| 10751 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Fifth Semester

பண்டைய இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. சங்க இலக்கியங்கள் எவை?

2. இயன்மொழி - விளக்கம் தருக.

3. பகற்குறி, இரவுக்குறி குறித்து கூறுக.

4. இடந்தலைப்பாடு என்றால் என்ன?

5. நெடுநல்வாடையின் ஆசிரியர் யார்?

6. புண்ணுமிழ் குருதி - பெயர்க்காரணம் கூறுக.

7. நெய்தல் திணைப் பற்றி குறிப்பிடுக.

8. செலவு அழுங்குவித்தல் - பொருள் விளக்கம் தருக.

9. ஊழிக்காலம் என்பது என்ன?

10. திருக்குறள் முதன்முதலில் எம்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வினைமுற்றும் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியதை விளக்குக.

(அல்லது)

(ஆ) பல்சான்றீரே என்ற பாடல் பொருளை விவரிக்க.

12. (அ) பரிசில் நீட்டித்தானை ஆவூர் மூலங்கிழார் பாடியதை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பருவங்கண்டழிந்த தலைவி மேகத்தை நோக்கி கூறியதை விளக்கிக் கூறுக.

13. (அ) இடைச்சுரத்தின் தீமை குறித்துத் தலைவன் வருந்துவதை சிறைக்குடி ஆந்தையார் பாடல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) பிரிவில் வருந்திய தலைவி தோழிக்கு உரைத்ததை நெய்தல் கலி மூலம் விவரிக்க.

14. (அ) ஐங்குறுநூற்றின் தனித்தன்மைகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) ஊழிக்காலம் குறித்துக் கீரந்தையார் கூறும் செய்திகளை விவரிக்க.

15. (அ) திருக்குறளின் பெருமைகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கயவரின் செயல்களாக வள்ளுவர் கூறுவதை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தலைவி கூற்றுப்பாடல்கள் குறித்துக் கட்டுரை வரைக.

17. நெடுநல்வாடை காட்டும் அரண்மனை அமைப்பை விளக்கிக் கூறுக.

18. இரண்டாம் பத்துக் கூறும் வரலாற்றுச் செய்திகளை விவரித்தெழுதுக.

19. இடைச் சுரப் பத்துக் காட்டும் பாலை நில மாண்பினைத் தொகுத்து எழுதுக.

20. குடிமை என்னும் தலைப்பில் வள்ளுவம் தரும் செய்திகளைக் கட்டுரைக்க.

| D–1781 |
|---|

| Sub. Code |
|---|
| 10752 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Fifth Semester

இலக்கணம் — தொல்காப்பியம் : எழுத்து — இளம்பூரணம்

(CBCS 2018 – 2019 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. உட்பெறு புள்ளி உருவாகும் குறிப்பு வரைக.

2. சுட்டு, வினா எழுத்துக்கள் யாவை?

3. தத்தம் திரிபே சிறிய என்ப-விளக்குக.

4. ல, ள எவ்வாறு பிறக்கும்?

5. எழுத்துச் சாரியைகள் எவை?

6. உடம்படுமெய் என்றால் என்ன?

7. ‘யாவும் ஞாவும் வினையோர் அனைய’ எவ்விடத்தில்?

8. மழையென் கிளவி எவற்றோடு நிலையும்?

9. தந்நிலை திரியா நான்கு சொற்கள் யாவை?

10. ‘ஆறுஎன் கிளவி முதல் நீடும்மே’ - விளக்குக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) நூன்மரபின் பெயர்க்காரணம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) எழுத்துக்களுக்குரிய மாத்திரைகளை விளக்குக.

12. (அ) மூவகை மொழிகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) எழுத்துக்களின் பொதுப்பிறப்பை விளக்குக.

13. (அ) இருவகைப் புணர்ச்சிகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) எழுத்தோர் அன்ன பொருள்தெரிப் புணர்ச்சி விதிகளை எழுதுக.

14. (அ) உயிரீற்றுச் சொற்கள் உருபொடு புணரும் சாரியைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐகார ஈற்றுச் சொற்கள் புணரும் முறையினை எழுதுக.

15. (அ) யகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தொண்ணூறு, தொள்ளாயிரப் புணர்ச்சி விதிகளைக் கூறுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளி.

16. மெய்மயக்கம் பற்றி கட்டுரை வரைக.

17. சாரியைகளையும் அவற்றின் திரிபுகளையும் பற்றி விவரிக்க.

18. அளவு, நிறை எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியைப் தொகுத்தெழுதுக.

19. மகர ஈற்றுச் சொற்கள் புணருமாற்றை விளக்குக.

20. குற்றியலுகரம் பற்றியத் தொல்காப்பியரின் சிந்தனைகளைத் தொகுத்தெழுதுக.

| D–1782 |
|---|

| Sub. Code |
|---|
| 10753 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Fifth Semester

ஊடகவியல்

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தகவல் தொடர்பியல் என்றால் என்ன?

2. ஒளிப்பரப்பு ஊடகவியல் குறிப்பு வரைக.

3. சிறுவர் இதழ்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

4. செய்தி உள்ளடக்கத்தின் வாய்ப்பாட்டைக் கூறுக.

5. PTI-செய்தி நிறுவனத்தின் விரிவாக்கம் தருக.

6. மரபு சார் ஊடகங்கள் என்பதை விளக்குக.

7. பத்திரிக்கை மன்ற சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு?

8. இந்தியாவால் ஏவப்பட்ட முதல் செயற்கைக்கோள்?

9. காது விளம்பரம் எப்பக்கத்தில் இடம்பெறும்?

10. 'Google Map' - செயலியின் பயன் யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஊடகவியல் என்பதற்கான சொல் விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) ஊடகவியலின் செயல்முறைகள் குறித்து விளக்குக.

12. (அ) இதழ்களின் வகைகளைச் சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) இதழ்களில் திரைப்பட விமர்சனம் இடம் பெறுமாற்றை எழுதுக.

13. (அ) செய்தியாளர் கருவிகள் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) செய்தியின் கட்டமைப்பைப் புலப்படுத்துக.

14. (அ) ஊடக விளம்பரத்தை வகைப்படுத்திக் காட்டுக.

(அல்லது)

(ஆ) இதழியல் தொடர்பான இந்திய தண்டனைச் சட்டங்களை விவரிக்க.

15. (அ) பண்பலை வானொலிகளின் வளர்ச்சியை விளக்குக.

(அல்லது)

(ஆ) மின்னணு இதழ்கள் பற்றியக் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஊடக சாதனங்களின் வகைகளைச் சான்றுகள் தந்து விளக்குக.

17. இதழ் ஆசிரியர்களின் பணிகளையும் பண்புகளைக் கட்டுரைக்க.

18. செய்தி நிறுவனங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துக.

19. தள அடிப்படையில் செய்யப்படும் விளம்பரங்கள் குறித்துக் கருத்துரைக்க.

20. மக்களிடம் சமூக ஊடகங்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை விவரிக்க.

---

**D–1783**

**Sub. Code**
**10754**

DISTANCE EDUCATION

B.Lit (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023

Fifth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் : சொல் - சேனாவரையம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. வழக்கின் வகைகள் கூறுக.
2. வேற்றுமையின் வகைகள் யாவை?
3. 'னகர' ஈற்றில் விளியேலாப் பெயர்கள் எவை?
4. 'மகடூஉ மருங்கின் பல்திரி கிளவி' – விளக்குக.
5. தன்மைப் பன்மை வினைமுற்றுக்களைச் சுட்டுக.
6. 'உம்' என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?
7. 'ஏகார' இடைச் சொல்லுக்குரிய பொருள்களைத் தருக.
8. பயப்பு, பசப்பு - தரும் பொருள்கள் எவை?
9. உம்மைத்தொகை பொருந்தி வரும் பெயர்களை எழுதுக.
10. 'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே' - விளக்குக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடையளி.

11. (அ) வினா, விடைகளின் வகைகள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) இரண்டாம் வேற்றுமையின் பாகுபாட்டை விளக்குக.

12. (அ) விளியேற்கும் பெயர்களைச் சான்று தந்து நிறுவுக.

(அல்லது)

(ஆ) நால்வகைச் சொற்களின் பொதுவிலக்கணங்களைப் பெயரியல் கொண்டு விளக்குக.

13. (அ) தொல்காப்பியர் கூறும் உயர்திணைப் பெயர்களுக்குச் சான்று தருக.

(அல்லது)

(ஆ) ஏகார என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

14. (அ) கடி என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) அறுவகைச் செய்யுள் விகாரங்களைச் சான்றுடன் நிறுவுக.

15. (அ) நான்கு பொருள்கோள்களை எடுத்துக்காட்டின் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) பண்பின் அடிப்படையில் பிறக்கும் உரிச்சொற்கள் யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளி.

16. திணை, பால் வழுவமைதி பற்றிச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

17. தொல்காப்பியர் கூறும் ஆகுபெயரின் பாகுபாடுகளைக் குறிப்பிடுக.

18. வினையியல் கூறும் எச்சங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

19. இடைச்சொல்லின் பொதுவிலக்கணத்தையும் அதன் வகைகளையும் விளக்குக.

20. எச்சவியல் கூறும் தொகைச் சொற்களின் வகைகளைத் தொகுத்துரைக்க.

———————

| D–1784 |
|---|

| Sub. Code |
|---|
| 10761 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Sixth Semester

ஒப்பிலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. இலக்கிய வரலாறு குறித்த ஹெர்டரின் கருத்து யாது?

2. இந்திய வீரயுகம் என்ற நூல் யாரால் எந்த ஆண்டு வெளியிடப்பட்டது?

3. "ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம்" என்ற நூலின் ஆசிரியர் யார்?

4. தமிழ் மொழிபெயர்ப்பில் பின்பற்றப்படும் வரும் நால்வகை முறைகள் யாவை?

5. சிக்மண்ட் ஃபிராய்டு மனத்தை எவ்வாறு பகுத்துக் காண்கிறார்?

6. திராவிட சங்கத்தை நிறுவியவர் யார்?

7. ஊரொடு தோற்றம் என்பது எவ்வகைச் சிற்றிலக்கியமாகக் குறிக்கப்படுகின்றது?

8. பாரதியார் தனது புதுக்கவிதைகளை எவ்வாறு குறிப்பிட்டார்?

9. வீறுணர்ச்சிக் கவிதைகளின் இருவகைப் போக்குகள் யாவை?

10. ஜான் ஃப்ளச்சா ஒப்பிலக்கியத்திற்கு அளிக்கும் விளக்கம் யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நால்வகை இலக்கியப் பார்வைகளை அறிமுகம் செய்க.

(அல்லது)

(ஆ) இயற்கை அறிவியல் கோட்பாடு என்றால் என்ன? விளக்குக.

12. (அ) மொழிபெயர்ப்பாளனின் தகுதிகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கித்திற்கும் மொழி பெயர்ப்புக்கும் உள்ள தொடர்புகளை விவரிக்க.

13. (அ) இலக்கியமும் நுண்கலைகளும் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) காலந்தோறும் மாறும் கோட்பாடுகள் விளக்குக.

14. (அ) சிற்றிலக்கியத் தோற்றக் காரணிகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அகப் பாடல்களின் பொருளமைவுகள் குறித்து அறிமுகம் செய்க.

15. (அ) இலக்கியத்தில் உணர்வும் அறிவும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கியத்தின் ஆய்வுப் பரப்பினை எடுத்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. ஒப்பிலக்கிய ஆய்வின் தோற்றம் வளர்ச்சி குறித்துக் கட்டுரை தருக.

17. ஒப்பிலக்கியத்தில் தாக்கக் கொள்கைகள் பெறும் இடத்தை விளக்கியுரைக்க.

18. அறநெறிக்கால இலக்கியப் போக்குகளை எடுத்துரைக்க.

19. புதுக்கவிதையின் பல்வேறு காலகட்டங்கள் குறித்து விவரித்தெழுதுக.

20. அகஇலக்கியங்களின் தனித்தன்மையை நும் பாடப்பகுதி வழிப் புலப்படுத்துக.

———————

**D – 1785**

**Sub. Code**
**10762**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Sixth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் : பொருள் – இளம்பூரணம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three Hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. கைக்கிளை என்பதற்கு இளம்பூரணர் தரும் பொருள் யாது?
2. பாக்கத்து விரிச்சி எத்திணைக்கு உரியது?
3. தோலது பெருக்கம் என்பதில் தோல் எதனைக் குறிக்கிறது?
4. கெடுதி வினாதல் விளக்கம் தருக.
5. கொடுப்போர் இன்றி நிகழும் கரணம் எப்பொழுது நடைபெறும்?
6. இளிவரல் நான்கு எது?
7. உவமத் தோற்றம் நிகழும் இடங்கள் எவை?
8. உரியசைகள் எவை?
9. வெண்பாவிற்கு உரிய அடிகளைக் குறிப்பிடுக.
10. எண்ணப்படாத எழுத்துகளை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11\. (அ) தொல்காப்பியர் சுட்டும் உரிப்பொருள்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அகத்திணையியல் குறிக்கும் பொருள்வயிற் பிரிவு பற்றிக் கூறுக.

12\. (அ) நூழிலாட்டுப் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) இயற்கைப் புணர்ச்சிக்கு உரிய திறன்களை எடுத்துரைக்க.

13\. (அ) கற்பில் காமக்கிழத்தி கூற்று நிகழிடங்கள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) அழிவில் கூட்டத்திற்கு உரிய பொருள்களை விளக்குக.

14\. (அ) உவமப் போலிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆசிரியப்பாவிற்கு உரிய அடிகளும் விரவி வரும் அடிகளும் குறித்து விளக்குக.

15\. (அ) தொல்காப்பியர் குறிப்பிடும் 'மாட்டு' குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நூலின் பத்து வகைக் குற்றங்களைப் பட்டியலிடுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. கைக்கிளைப் பெருந்திணைக் குறித்து அகத்திணையியல் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. வெட்சித்திணையின் துறைகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

18. கற்பில் வாயில்கள் நிகழ்த்தும் கூற்றுகள் என்ற தலைப்பில் கட்டுரை தருக.

19. எண்வகை மெய்பாடும் அதன் விரிகளும் குறித்து விவரித்தெழுதுக.

20. வண்ணம் குறித்த தொல்காப்பியர் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

| D–1786 |
|---|

| Sub. Code |
|---|
| 10763 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Sixth Semester

நாடகத் தமிழ்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. நாடகத்தின் பயன்கள் இரண்டினைக் கூறுக.
2. கூத்து நூலை எழுதியவர் யார்?
3. மத்த விலாச நாடகத்தின் நோக்கம் என்ன?
4. மானவிஜயம் நாடகத்தின் கதைக் கருவைக் குறிப்பிடுக.
5. குழந்தை நாடகம் யாருக்காக எழுதப்பெறுகிறது?
6. வானொலி நாடகம் – குறிப்பு வரைக.
7. நவீன நாடகங்கள் என்றால் என்ன?
8. களரி என்பது யாது?
9. தமிழ் நாடக மறுமலர்ச்சிப் பெருந்தகை என்று அழைக்கப்படுபவர் யார்?
10. மௌனக்குரல் பெண்கள் அரங்கக் குழுவின் செயல்பாடுகள் இரண்டை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சோழர்கால நாடகங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மாதவி ஆடிய பதினோறு வகை ஆடல்களை விளக்கி வரைக.

12. (அ) குறு நாடகங்கள் குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) நாட்டிய நாடகங்களை விளக்குக.

13. (அ) வரலாற்று நாடகத்தின் வகைகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நாடக அரங்கின் திரைச் சீலைகள் குறித்து எழுதுக.

14. (அ) ஆண் நாடகக் கலைஞர்களின் நாடகப் பணி குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) நாடக கலை வளர்ச்சிக்குத் துணைபுரிந்த நாடக சபாக்கள் பற்றி குறிப்பிடுக.

15. (அ) பாலாமணி அம்மையார் நாடகத்திற்கு ஆற்றிய பணி குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) புராண நாடகப் பாடல்கள் தேசிய உணர்வை ஊட்டியதைச் சான்றுடன் விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழ் இலக்கியங்களில் நாடகம் குறித்துக் கூறப்பட்டுள்ள கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

17. மனோன்மணியம் நாடகத்தின் கதையை விளக்கி வரைக.

18. வீதி நாடகங்கள் குறித்து விரிவாக எழுதுக.

19. சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய நாடகங்கள் பற்றி எழுதுக.

20. விடுதலை வேள்வியில் நாடகக் கலைஞர்கள் ஆற்றிய பணி குறித்து எழுதுக.

———————

| D–1787 |
|---|

| Sub. Code |
|---|
| 10764 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2023.

Sixth Semester

விளம்பரக்கலை

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தரகுத் தொகை என்பது யாது?
2. கூவியர் என்பவர் யார்?
3. விளம்பரங்களை வகைப்படுத்தப் பயன்படும் நான்கு நிலைகளைக் குறிப்பிடுக.
4. வானொலியை எவ்வாறு பாகுபடுத்தலாம்?
5. விளம்பரத்தால் நுகர்வோர் அடையும் பயன்கள் இரண்டனைக் குறிப்பிடுக.
6. ABC என்பதன் விரிவாக்கம் என்ன?
7. டைம்ஸ் ஆஃப் இந்தியா வழங்கும் விளம்பர விருது குறித்து எழுதுக.
8. விளம்பர நகலின் நான்கு பிரிவுகள் யாவை?
9. விளம்பரங்களால் விற்பனைப் பெருக்கம் அடைவதற்குச் சான்று தருக.
10. மதிப்புரை உத்தி - விளக்கம் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) அறிவிப்பும் விளம்பரமும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) செய்தித்தாள் விளம்பரங்கள் பற்றி விளக்கம் தருக.

12. (அ) விளம்பரத்தின் கூறுகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) விளம்பர ஒழுக்க நெறிகள் குறித்து எழுதுக.

13. (அ) தடை செய்யப்பட்ட விளம்பரங்களின் தன்மைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நுகர்வோரின் வழிகாட்டிகள் - விவரிக்க.

14. (அ) விளம்பர அறங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) விளம்பரங்களில் பண்பாட்டுக் கலப்புக் குறித்து விவரிக்க.

15. (அ) விளம்பரச் சட்டங்கள் குறித்து விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) விளம்பர உத்திகளின் தீமைகள் யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. விளம்பர வகைகளை விவரித்தெழுதுக.

17. ஊடகங்களும் விளம்பரங்களும் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

18. விளம்பரத்தின் நன்மை தீமைகளை விளக்கியுரைக்க.

19. விளம்பர நிறுவன விருதுகளும் நுகர்வோர் வழிகாட்டிகளும் குறித்து விவரிக்க.

20. விளம்பர நிறுவனங்கள் கொள்ள வேண்டிய ஒழுக்க நெறிகளை எடுத்துரைக்க.

————————